# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவரின் திருக்காட்சி | 5 ஜனவரி 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
**திருஅவை - இரக்கத்துடன் இருக்க அழைப்பு**

# கடவுளின் அருளில் எதிர்நோக்கின் அறிவிப்பு

ஆண்டவரின் திருக்காட்சி என்பது எதிர்நோக்கின் கொண்டாட்டம். இந்த ஜூபிலி ஆண்டில் கடவுளின் அருளில் எதிர்நோக்கை அறிவிப்பதில் முழுமையாகப் பங்கு பெற ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் நம்பிக்கைக் கொள்கிறார்.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இயற்கைப் பேரிடர்கள் மற்றும் வானிலையின் தன்மைகள் தொடர்ந்து நம் வாழ்வை அச்சுறுத்துகின்றன. போரின் பயங்கரங்கள் இன்னும் அச்சமூட்டுபவையாக உள்ளன. செல்வத்தின் நியாயமற்ற பங்கீடுகள், சமத்துவமின்மை ஆகியவை இருக்கும்வரை வறுமை நிச்சயம் இருக்கும்.



உலகம் இருளால் சூழப்பட்டுள்ளது. பலர் நம்பிக்கையின்மையை அனுபவிக்கின்றனர். நமது நிலை எவ்வளவு துயரமானதாக இருந்தாலும், நாம் நம்பிக்கை மற்றும் எதிர்நோக்கின் கலங்கரை விளக்காக இருக்கவேண்டும்.

திருஅவை இரக்கத்துடன் இருக்க நமக்கு அழைப்பு விடுத்தது போல், விமர்சனங்கள் மற்றும் பாராட்டுகள் இவை இரண்டிலுமிருந்தும், நாம் இன்னும் விடுபடவில்லை. இன்று நற்செய்தியையும் திருக்காட்சி அடையாளங்களையும் நாம் கண்டு, நம்முடைய எதிர்நோக்கை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளை முழுமையாக எதிர்நோக்கியிருப்போம்.

இருள் சூழ்ந்திருந்த ஒரு காலத்தில் எசாயா மக்களை எதிர்நோக்கோடு இருக்கும்படி அழைக்கிறார். ஒளி தோன்றும், கடவுளின் மாட்சி உதித்தெழும் என்ற உறுதியையும் நிலைத்தன்மையையும் அவர் தருகிறார். பூவுலகை மூடும் இருளை உடைத்தெறிய மீட்பர் வருவார். ஆம் இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியதைக் காண்கிறோம். நம் மீட்பர் வந்துள்ளார். விண்மீனின் வழிகாட்டுதலின்படி வந்த கீழ்த்திசை ஞானிகள் தங்களுடைய தேடுதலின் அடையாளமாக பொன், தூபம் வெள்ளைப்போளத்தைக் காணிக்கையாக்கியது, புறவினத்தாருக்கு கடவுள் தம்மையே வெளிப்படுத்திய திருக்காட்சியின் அடையாளங்கள். அவர்கள் வழியைக் காட்டினார்கள். அவர்கள் சொன்னார்கள்; நாம் நம்பிக்கைக் கொண்டோம்.

நம்பிக்கைக் கொள்வது நல்லது. ஆனால் அதன்படி நடப்பது வேறு. திருப்பாடல் ஆசிரியர் கூறுகிறார். மெசியாவின் நீதி மற்றும் இரக்கம் அனைவருக்குமானது. நம் விண்ணகத்தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் அனைவரும் இரக்கமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஏழை கூக்குரலிடும்போதும், துன்பத்தில் இருப்போருக்கு உதவியில்லாதபோதும் நாம் அவர்களைக் காப்பாற்றுவோம். எளியோருக்காகவும், ஏழைகளுக்காகவும் இரங்குவோம். இறைவன் இவர்களைக் காப்பார்.

புனித பவுல் இவ்வாறு வலியுறுத்துகிறார். கடவுளின் அருளால் நாம் அவரின் பணியாளர்களாகவும், அவர் உடலின் இணைவாரிசுகள் மற்றும் உடன் பங்காளர்களாகவும் இருக்கிறோம். உலகின் ஒளியாக வந்திருக்கும் இயேசு தரும் எதிர்நோக்கைக் கொண்டு செல்லும் கலங்கரைவிளக்காகவும், நம்பிக்கையின் உரிமையாளர்களாகவும் திகழ்வோம். ❖

> திருஅவை என்பது இந்த உலகில் எல்லா காலத்திலும், அனைத்து மனித இனத்திற்கும் கடவுளின் இரக்கத்தையும் புனிதத்தையும் தருவதைத் தவிர வேறொன்றும் இல்லை.
>
> **திருத்தந்தை பிரான்சிஸ்**

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 60:1-6

திருப்பாடல்: 72: 1-2, 7-8, 10-11, 12-13

எபேசியர்: 3: 2-3, 5-6

மத்தேயு 2: 1-12

INTERNAL CIRCULATION ONLY
BUL 01/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org